# <u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

***OS.No.48/2020*** **Date: 03.03.2026**

***DW1 –*** ரவீந்தர்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி :-</u>

நான் ஏற்கனவே 15.07.2025 ல் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சான்றாவணங்கள் பட்டியலில் உள்ள ஆவணம் பி.வா.சா.ஆ.9.ஆக வாதிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை.</u>

நான் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். நான் படித்து பார்க்காமல் எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்ததில்லை. பூர்த்தி செய்யப்படாத முத்திரைத் தாள்களில் கையெழுத்து செய்ததில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ல் என்னுடைய கையொப்பமும், என் அண்ணன் மற்றும் என் அப்பா கையெழுத்துகளும் உள்ளது என்றால், சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 350/1 என்றால், சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 3.32 ஏக்கர் என்றால், சரிதான். அதில் பேர் பாதி 1.62 ஏக்கர் நிலத்திற்கு ஒப்பந்தம் போடப்பட்டது என்றால், சரிதான். நான் சங்ககிரியில் சுமார் 20 வருடங்களாக குடியிருக்கிறேன் என்றால், சரிதான். என் அண்ணன் சுந்தர்ராஜன், கந்தசாமி ஆகியோர் லாரி ஓட்டுநர்கள் என்றால், சரிதான். அவர்கள் சுமார் 25 வருடங்களாக ஓட்டுநர் தொழில் செய்கிறார்கள் என்றால், சரிதான். என் தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இறந்தார் என்றால், சரிதான்.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/- ரவீந்தர்

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.